**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>27.01.2026</u>**

OS. No. 257/2010

பக்கம் – 8

PW1 – பிரேமா

**<u>3ம் பிரதிவாதியின் தரப்பில் மனுவின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என்னுடைய தந்தை அந்த காலத்தில் பத்மாவதி அன்டு கோ என்ற பெயரில் மளிகை கடை வைத்து நடத்தி வந்தார். 1972 ஆண்டு வரை இந்த கடையில் என்னுடைய தந்தை நடத்தி வந்தார். அதன் பிறகு அந்தக் கடையை மூடிவிட்டார். அந்த சமயத்தில் என்னுடன் பிறந்தவர்களுக்கு 3 நபர்களுக்கு மட்டும் திருமணம் நடைபெற்றிருந்தது. மீதமுள்ள ஐந்து நபர்களுக்கு திருமணம் ஆகவில்லை. 1973 ஆம் ஆண்டு என்னுடைய தந்தை பத்மவாதி அண்டு கோ என்ற பெயரில் மறுபடியும் அந்த மளிகை கடையை தொடங்கி 1980 ஆண்டு வரை நடத்தி வந்தார். 1980 ஆம் ஆண்டு வரை மூன்று மற்றும் நான்கு பிரதிவாதிகளுக்கு திருமணம் நடத்தப்பட்டது. மூன்றாவது பிரதிவாதியை போல 1, 2, 4 மற்றும் 5 பிரதிவாதிகளும் என்னுடைய தந்தைக்கு மாதா மாதம் செலவுத்தொகையை அனுப்பி வந்தார்களா என்றால் அவர்கள் கூட்டுக் குடும்பமாக என்னுடைய தந்தையுடன் வசித்து வந்த காரணத்தினால் அவர்கள் என்னுடைய தந்தையை பராமரித்து வந்தார்கள் அதனால் பணமாக அனுப்பி வைக்கவில்லை. ஒன்பதாவது பிரதிபாதியின் திருமணத்திற்காக வேண்டி ஒன்றரை ஏக்கர் இடத்தை கிரயம் செய்து கொடுத்ததாக நான் சொல்லியுள்ளதில் என்ன காரணத்திற்காக அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது என்னுடைய தாயார் சொல்லி தான் இது குறித்து எனக்கு தெரியும். அந்த

கிரைய ஆவணத்தில் ஒன்பதாவது பிரதிவாதியின் திருமணத்திற்காக வேண்டி தான் அந்த சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எங்கள் நான்கு பெண் குழந்தைகளுக்கு என்னுடைய தந்தை சீர்வரிசையுடன் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். எங்களுடைய திருமண செலவுகளை என்னுடைய தந்தை தான் செய்தார். 10ம் பிரதிவாதியின் திருமணத்தின் போது என்னுடைய தந்தை உயிருடன் இல்லை என்றால் சரிதான். பத்தாம் பிரதிவாதியின் திருமணத்திற்கு ஆண் வாரிசுகள் தான் செலவு செய்து திருமணம் செய்தார்கள் என்றால் தவறாகும். என்னுடைய தந்தை காலமாகும் பொழுது அவரது திருமணத்திற்காக வேண்டி நகைகள், பணம் ஆகியவற்றை வைத்து தான் சென்றார். அவருடைய திருமணத்தை என்னுடைய சகோதரர்கள் தான் முன்நின்று நடத்தினார்கள். அவருடைய திருமணத்திற்கு என்னுடைய தந்தை விட்டுச் சென்ற பணம் மற்றும் நகைகள் சரியாக போதிவிட்டது அதற்கு மேல் எந்த ஒரு செலவும் ஆகவில்லை. என்னுடைய தந்தை பத்தாம் பிரதிவாதியின் திருமணத்திற்காக வேண்டி 30,000/- ரூபாய் பணம் விட்டுச் சென்றார். பத்தாம் பிரதிவாதியின் திருமணத்திற்கு திருமண செலவுக்காக வேண்டி 15 சவரன் தங்க நகைகளை விட்டுச் சென்றார். என்னுடைய தந்தையின் காலத்திற்குப் பிறகும் பத்தாம் பிரதிவாதியின் திருமண நாள் வரையிலும் அவருடைய திருமண செலவுக்கான நகைகள் பத்தாம் பிரதிவாதியிடம் தான் இருந்தது. பணம் மட்டும் நான்காம் பிரதிவாதியிடம் இருந்தது. எங்கள் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் கூட்டு குடும்ப செலவிற்காக வேண்டி மூன்றாம் பிரதிவாதி ரமேஷ்பாபு தான் மாதா மாதம் பணம் கொடுத்து வந்தார் என்றால் சரிதான். குடும்ப குடும்ப அபிவிருத்திக்காக

வேண்டி ரூபாய் 5000 மட்டும் தான் ரமேஷ் பாபு அனுப்பியிருந்தார் அந்தப் பணத்தையும் என்னுடைய தந்தை அவருக்கு திரும்ப கொடுத்துவிட்டார் இதுபோன்ற விபரத்தை நான் வழக்குக்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றும் ஏனென்றால் நான் திருமணமாகி என்னுடைய கணவர் வீட்டுக்கு சென்றுவிட்ட காரணத்தினால் என்னுடைய தந்தையின் கூட்டுக் குடும்ப விவகாரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. மூன்றாம் பிரதிவாதி ரூபாய் ஐந்தாயிரம் மட்டும் பணம் எதுவும் என்னுடைய தந்தையிடம் கொடுக்கவில்லை என்றும் ரூபாய் 12000/– க்கு மேல் சேலைகள் குடும்ப அபிவிருத்திக்காக வேண்டி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஒன்பதாம் பிரதிவாதியின் திருமணத்திற்காக வேண்டி ரூபாய் 15,000/– சொத்தை விற்றப் பின்பும் ரூபாய் 3 லட்சத்திற்கு மேல் மூன்றாம் பிரதிபாதி என்னுடைய தந்தையிடம் திருமண செய்வதற்காக வேண்டி கொடுத்துள்ளார் என்றால் தவறாகும். இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னுடைய சகோதர சகோதரிகளுடன் பாகம் பிரிப்பது தொடர்பாக நாங்கள் ஆலோசனை செய்தோம். அந்த சமயம் மூன்றாம் பிரதிவாதி அவர் குடும்பத்திற்காக செய்த செலவுகள் விபரத்தை எங்களிடம் தெரிவித்தார் என்றால் அவர் எப்பொழுதும் சொல்வது போல் எங்களிடம் சொல்லி உள்ளார். அந்த காலகட்டத்திலேயே நாங்கள் அனைவரும் மூன்றாம் பிரதிவாதிக்கு அதிகமான பங்கீடு ஒதுக்குவதாக ஒத்துக் கொண்டோம் என்றால் தவறாகும். அவ்வாறு ஒத்துக்கொண்டு தற்போது சரிசமமான பங்கு வேண்டும் என்று பொய்யாக இந்த வழக்கை நடத்தி வருகின்றேன் என்றால் தவறாகும். மூன்றாம் பிரதிவாதி அதிகப்படியாக கூட்டுக் குடும்பத்திற்காக வேண்டி செலவு செய்துள்ள காரணத்தினால் இந்த

வழக்கு சொத்துக்களை பாகம் ஒதுக்கும் பொழுது அவருக்கு அதிகப்படியான பாகம் ஒதுக்கப்பட வேண்டும் என்றால் தவறாகும். நான் கோரியப்படி சரிசமமான பாகம் இவ்வழக்கில் ஒதுக்கப்படத் தேவையில்லை என்றும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்